# வளர் தமிழ்

# 2

## பாடநூல்




கல்வி மேம்பாட்டுப் பேரவை

# வளர் தமிழ்

# 2

## கேட்டல் பேசுதல் வாசித்தல்

# புலம்பெயர் தமிழ் மாணவர் கற்கை நூல்

பாட ஒழுங்கு கட்டுருவாக்க நெறியாள்கை

Consultant Curiculam Matters & Designing of the Instructional Materials

பேராசிரியர் முனைவர் சுப். திண்ணப்பன்
Professor Dr. Sp. Thinnappan
M.A, M.Lit.Ph.D
National University of singapore
SIM University, Singapore

வள அறிஞர்கள்

பேராசிரியர் ப. அருளி
Professor Pa. Aruli
Scholastic Researcher
Department of Dictunary of Pure Tamil Technical Terms and Transcreation
Tamil University Thanjavur

நூலாக்கம்

திரு. பொன்னையா விவேகானந்தன் (M.A)
திருமதி. லதா ராசன் (B.A Dip In Education, Trained teacher GTC)
திரு. தங்கேசுவரி கெங்காதரன் (B.A Hons)
திருமதி. யெயமதி இராசேந்திரம்
திருமதி. வனிதா சிவகுமார் (Trained teacher GTC)
திரு. முருகுப்பிள்ளை ஞானவேல் (Senior Assessor LCCIEB)
திருமதி. சுயாதா சண்முகநாதன் (தமிழ்ப் பிரவேச பண்டிதர்)
திருமதி. விசயா செல்வநாயகம்
திருமதி. ரேணுகா முருகானந்தராசா
திருமதி. யோகாதேவி குணதாசன்

ஓவியம்

திரு. இராமசாமி குணதாசன்
செல்வன். பரமேசுவரராஜா கபில்ராஜ்

பாடல்கள்

திரு.அருள் சுப்பிரமணியம்
திருமதி. லதா ராசன்
திருமதி. உமாகாந்தி சச்சிதானந்தன்

நூல் வடிவமைப்பு : செல்வி. பிறிந்தா ஜெயசீலன்

செய்திட்ட நிறைவேற்றுநர் : திருமதி. நகுலேசுவரி அரியரத்தினம்
மேலாளர் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

பதிப்புரிமை : தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

முதற் பதிப்பு 2011

**Copyright 2011 TEDC**

**All Rights reserved. No part of this Publication may be reproduced, stored in a ret‹ieval system, or transmitted, in any form or by any means, electronic, mechanical, photocoр[illegible]rding or otherwise, without prior written permission of the publisher.**

# *முன்னுரை*

புலம் பெயர்ந்து வாழும் எம் தமிழ்ப் பெருங்குடியின் நிகரிலா அன்புச் செல்வங்களே!

நீங்கள் மாணவராய், பெற்றோராய், ஆசிரியர்களாய் இன்னும் பல்வேறு வழிகளிலே **தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையினுடன்** தொடர்பு உடையவர்களாக உள்ளீர்கள்.

உங்களுடன் தாய்மொழிக் கல்வித் தொடர்பில் பேசுவதில் **தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை** பெருமை கொள்கிறது. புலம்பெயர்ந்து வாழும் நீங்கள் கடல் கடந்தாலும் உங்களது பண்பாட்டுக் கோலங்களையும் இனப்பற்றையும் மொழிப்பற்றையும் கடந்து விடாது போற்றுகின்ற உங்களது பற்றைக்கண்டு, உங்களது இனமொழி நாட்டங்களைச் செழுமையுறச் செய்வதற்காக எம்மால் முடிந்தவரை உருவாக்கப்பட்டதே இந்நூற்றொடராகும்.

இந்நூல்களிலே எமது எதிர்கால ஆக்கர்களாகிய இளஞ்சிறார்கள் எத்தகைய அறிவைத் தமது மொழிக்கற்கை ஊடாகப் பெறவேண்டும் எவ்வாறு அவர்களை நற்றமிழர்களாக இனவெல்லைக்குள் கொண்டு வரக்கூடிய அறிவைப் பெருக்க வேண்டும் என்று எண்ணித் துணிந்த பாடங்களையே அலகுகளாகக் கொண்டு **வளர்தமிழ் 2** வெளிவருகிறது.

ஒருவர் தனது தாய்மொழியை அதற்குரிய விழுமியங்களூடாகவே கற்க வேண்டும். அப்போதுதான் கற்பவரின் மனதில் தாய்மொழி உணர்வு வலுப்பெறும். எனவே; நாம் அறிந்தவரையிலும் அறிஞர்களின் மதியுரைகளூடாகவும் எம்மால் இயன்றவரை இனிய செந்தமிழில் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. தமிழ்ச் செல்வங்கள் இந்நூலைக் கருத்தூன்றிக் கற்றுத் தேறுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

நகுலேசுவரி அரியரத்தினம்
**மேலாளர்**
*தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை*

## About this book and other materials

**Tamil is one of the classical languages of the world. The purpose of these books and materials is to help the teaching of Tamil language in various levels, namely Nursery, Kindergarten (Reception), Primary, Intermediate, Secondary, Higher secondary and Tertiary levels. The curriculum of these Tamil learning materials synchronizes with the main stream of our education system. The content of the curriculum covers not only the Tamil language but also Tamil culture and heritage without mixing religion, politics or races.**

**These materials are produced and published by *Tamil Education Development Council* which manages Tamil education system in countries such as Italy, Holland, Australia, Belgium, Canada, Denmark, Finland, France, Germany, Newzeland, Norway, Sweden and United Kingdom. More than 30000 students are benefited by this Tamil learning system.**

## இந்நூல் பற்றி ....

தமிழ் மொழியானது செம்மொழிகளில் ஒன்று. இந்நூலும் ஏனைய பயிற்று கருவிகளும் தமிழ்மொழியை மழலையர், பாலர் தொடக்கம், இடை, உயர், மேல், பல்கலைக்கழக நிலைகளில் பயிலுவதற்கு உதவும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றின் பாடத்திட்ட ஒழுங்கமைப்பு நமது அரச பள்ளிகளின் பொதுக்கல்வித் திட்டத்தோடு இணைந்து செல்கிறது. இப் பாடத்திட்டத்தின் உள்ளடக்கம் மொழி கற்பதோடு மட்டுமன்றித் தமிழர்களின் கலை, பண்பாடு, வாழ்வியல் ஆகியவற்றையும் கற்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் சமய, இன வேறுபாடுகள் அற்ற அரசியல் சாராத வகையில் **தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையால்** உருவாக்கப்பட்டுள்ள இக் கற்றல் வளநூல்களை இத்தாலி, ஒல்லாந்து, பிரான்சு, பிரித்தானியா, செருமனி, நோர்வே, டென்மார்க், பெல்சியம், நியூசிலாந்து, பின்லாந்து, சுவீடன், கனடா, *அவுத்திரேலியா போன்ற நாடுகளிலுள்ள 30000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர்.*

| | | |
|---|---|---|
| 1 | தமிழ்மொழி | 09 |
| 2 | இன்கலைகள் | 11 |
| 3 | உதவுவோம் | 13 |
| 4 | பருவகாலங்கள் | 15 |
| 5 | புத்தியுள்ள காகம் | 17 |
| 6 | வள்ளல் | 20 |
| 7 | மூத்தோர் சொற்கேட்போம் | 22 |
| 8 | சங்கிலியன் | 24 |
| 9 | திருவள்ளுவர் | 26 |
| 10 | தைப்பொங்கல் | 28 |
| 11 | தாயகத்தில் இறைநிலவன் | 30 |
| 12 | தமிழர் | 33 |
| 13 | விளையாட்டு | 35 |
| | சோமசுந்தரப் புலவர் | 37 |

# தமிழே எங்கள் உயிர்



பெயர் : ------------------------------------------------------------

பள்ளி : ------------------------------------------------------------

ஆசிரியர் : ---------------------------------------------------------

நாள் : -------------------------------------------------------------

## பாடம் 1

# தமிழ்மொழி

கேட்போம் — பாடம் 01 — பேசுவோம்




**கற்பித்தற்குறிப்பு**

**நோக்கம் :-** ஒலிவட்டில் உள்ள பாடலைக் கேட்டு பாடச் செய்தல். காட்சியை விளக்கி வினாக்களைக் கேட்டு பேசச் செய்தல். தமிழே எங்கள் தாய்மொழி என்பதையும் தமிழைத் தாயாகப் போற்றி வணங்குகிறோம் என்பதையும் மாணவர் அறியச் செய்தல்.

**பேச டியவை :-** பழமையான மொழி/பழைமையான மொழி முதல் மொழி, முத்தமிழ், நூல்வளம்.

# வாசிப்போம்

எங்கள் தாய் மொழி தமிழ்.

தமிழ் பழைமையான மொழி.

தமிழ் ஓர் இனிய மொழி.

தமிழர் தமிழ் பேசுவர்.

நான் விரும்பும் மொழி தமிழ்.

நான் தமிழ் படிக்கிறேன்.

## விடை கூறுவோம்:

1. எங்கள் தாய் மொழி எது ?
2. எது பழைமையான மொழி?
3. இனிய மொழி தமிழ். சரியா? பிழையா?
4. யார் தமிழ் பேசுவர்?
5. நீர் விரும்பும் மொழி எது?

கற்பித்தற்குறிப்பு

**நோக்கம் :-** இப்பாடப் பகுதியை விளக்கி; வாசிப்புப் பொறிமுறைக்கு ஏற்ப பலுக்கி (உச்சரித்து) வாசிக்கச் செய்தல்.

**வாசிப்புப் பொறிமுறை:-**

- மயக்க ஒலி (லகர, ழகர, ளகர, ரகர, றகர, னகர, ணகர) வேறுபாடுகள் இனங்கண்டு தெளிவாகப் பலுக்கி வாசித்தல்.
- நிறுத்தற் குறிகள் :- முற்றுப்புள்ளி (.) வினாக்குறி (?)
- குறில் (அ) நெடில் (ஆ) வேறுபாட்டைப் பின்பற்றி வாசித்தல்.
- தடையின்றி வாசித்தல்.

**அடைவு :-** இப்பாட நிறைவில்; தாய்மொழி உணர்வை பெற்றிருத்தல், தமிழ் மொழியின் சிறப்புகளை அறிந்திருத்தல். மொழித்திறன்களைப் (கேட்டல், பேசுதல், வாசித்தல் எழுதுதல்) பெற்றிருத்தல்.

# இன்கலைகள்

கேட்போம் பாடம் 02 பேசுவோம்



கற்பித்தற்குறிப்பு

**நோக்கம் :-** ஒலிவட்டில் உள்ள பாடலைக் கேட்டு இசை அசைவுடன் பாடச் செய்தல். இக்காட்சியை விளக்கி இன்கலைகளைப் பற்றிப் பேசவைத்தல். இசைக்கருவிகளின் பெயர்களை அறியச் செய்தல். படத்தில் காணப்படும் பொருட்களை அறிந்து கொள்ளல்.

**பேசவேண்டியவை :-** இன்கலைகள், இசைக்கருவிகளின் பெயர்களும் அவற்றின் செயற்பாடுகளும். பழமையான மொழி, முதல் மொழி, முத்தமிழ், நூல்வளம்.

# வாசிப்போம்

பார்கவி பாட்டுப் பாடுவாள்.

நாவரசி நடனம் ஆடுவாள்.

வேந்தன் நாடகம் நடிப்பான்.

ஒளிநிலா ஓவியம் வரைவாள்.

மீனா மிருதங்கம் வாசிப்பாள்.

சேந்தன் சிற்பம் செதுக்குவான்.

வெண்மதி வீணை மீட்டுவாள்.

இசை, நடனம், நாடகம், ஓவியம், சிற்பம் என்பன இன்கலைகள் ஆகும். கலைகள் மகிழ்ச்சியைத் தரும். நாங்கள் இக்கலைகளைக் கற்போம்.

## விடை கூறுவோம்:

1. பார்கவி என்ன செய்வாள்?
2. ஒளிநிலா என்ன செய்வாள்?
3. சேந்தன் என்ன செய்வான்?
4. வீணை மீட்டுபவர் யார்?
5. மகிழ்ச்சியைத் தருபவை எவை?

**கற்பித்தற்குறிப்பு**

**நோக்கம் :-** கலந்துரையாடி; பாடத்தை விளங்க வைத்தல். வாசிப்புப் பொறிமுறைக்கேற்ப வாசிக்கச் செய்தல்.

**அடைவு :-** இன்கலைகள் பற்றியும் இசைக்கருவிகள் பற்றியும் அறிந்திருத்தல்.

# உதவுவோம்

கேட்போம் பாடம் 03 பேசுவோம்



கற்பித்தற்குறிப்பு

**நோக்கம் :-** ஒலிவட்டில் உள்ள கதையைக் கேட்கச் செய்தல். காட்சியை விளக்கி; பேசவைத்தல்.

**பேசவேண்டியவை :-** வீதிக்கடவை, உந்துகள், முதியவரின் இயலாமை, உதவும் பண்பு.

# வாசிப்போம்

பாவலன் இரண்டாம் வகுப்பு மாணவன். அவன் பள்ளிக்கு நடந்து சென்றான். வழியில் ஒரு பெரியவரைக் கண்டான். அவர் வெள்ளைப் பிரம்புடன் நின்றார். அந்தப் பெரியவர் வீதியைக் கடக்க முயன்றார். அப்போது பேருந்து ஒன்று வந்தது. பாவலன் உடனே பெரியவருக்கு வீதியைக் கடக்க உதவினான். பெரியவர் பாவலனுக்கு நன்றி கூறினார். பாவலனின் ஆசிரியர் இச் செயலை அறிந்தார். பள்ளியில் எல்லோரும் பாவலனைப் பாராட்டினர்.

## விடை கூறுவோம்:

1. பாவலன் எத்தனையாம் வகுப்பில் படிக்கிறான்?
2. அவன் வழியில் யாரைக் கண்டான்?
3. பெரியவர் எதனுடன் நின்றார்?
4. பாவலன் யாருக்கு உதவினான்?
5. ஏன் பாவலனை எல்லோரும் பாராட்டினர்?

**கற்பித்தற்குறிப்பு**

**நோக்கம் :-** இக் கதையை விளங்க வைத்தல். வாசிப்புப் பொறிமுறைக்கேற்ப வாசிக்கச் செய்தல். சொற்களின் பொருளைக் கூறுதல் பிறருக்கு உதவும் பண்பு பற்றி விளக்குதல்.

**அடைவு :-** பிறருக்கு உதவும் பண்பினைப் பெற்றிருத்தல். சொற்களின் பொருளை அறிந்திருத்தல் மொழித்திறன் வளர்ச்சி அடைந்திருத்தல்.

# பருவகாலங்கள்

கேட்போம் பாடம் 04 பேசுவோம்

autumn



winter





summer



spring

**கற்பித்தற்குறிப்பு**

**நோக்கம் :-** ஒலிவட்டில் உள்ள பாடலைக் கேட்டு இசை அசைவுடன் பாடச் செய்தல். நான்கு பருவகாலங்கள் பற்றியும் அக்காலங்களுக்குரிய செயற்பாடுகள் பற்றியும் காட்சிகளினூடாகப் பேசவைத்தல்.

**பேசவேண்டியவை :-** காலநிலைமாற்றம், அணியும் உடைகள், இரவு, பகற்பொழுதுகளில் ஏற்படும் நேர மாற்றங்கள், செயற்பாடுகள், விளையாட்டுகள்.

## வாசிப்போம்

இலை உதிர்காலத்தில்

இலைகள் மஞ்சள் நிறமாக மாறும்.

இலைகள் மரத்தில் இருந்து உதிரும்.

பனிகாலத்தில் பகற்பொழுது குறையும்.

பூம்பனி கொட்டும்.

இலைதளிர் காலத்தில் மரங்கள் துளிர்க்கும்.

பறவைகளின் ஒலிகள் எங்கும் கேட்கும்.

கோடைகாலத்தில் மரங்கள் பசுமையாகக் காட்சியளிக்கும்.

எங்கும் பல வண்ணப் பூக்கள் பூத்திருக்கும்.

### விடை கூறுவோம்:

1. இலை உதிர் காலத்தில் இலைகள் என்ன நிறமாக மாறும்?
2. பனி காலத்தில் பகற் பொழுது கூடும் சரியா? பிழையா?
3. பூம்பனி கொட்டும் காலம் எது?
4. பனிகாலத்துக்கு அடுத்து வரும் காலம் எது?
5. இக்காலங்களில் உங்களுக்குப் பிடித்த காலம் எது? ஏன்?

**கற்பித்தற்குறிப்பு**

**நோக்கம் :-** பருவகாலங்களைப் பற்றிக் கலந்துரையாடிப் பாடத்தை விளக்குதல். வாசிப்புப் பொறிமுறைக்கேற்ப வாசிக்கச் செய்தல், சொற்களின் பொருளை விளக்குதல் .

**அடைவு :-** பருவகாலங்களின் பெயர்கள், அக்காலங்களுக்குரிய விளையாட்டுகள், செயற்பா[illegible]ள், மாற்றங்கள் பற்றித் தெரிந்திருத்தல், சொற்களின் பொருளை அறிந்திருததல், மொழித்திறன் வளர்ச்சி பெற்றிருத்தல்.

கேட்போம் பாடம் 05 பேசுவோம்

# புத்தியுள்ள காகம்



1



2



3



4

**கற்பித்தற்குறிப்பு**

**நோக்கம் :-** ஒலிவட்டில் உள்ள பாடலைக் கேட்டு இசை அசைவுடன் பாடச் செய்தல். காட்சிகளை விளக்கி; காட்சிகளின் ஒழுங்கமைப்பின் மூலம் கதையை உருவாக்கி; பேசவைத்தல். இக்கதையில் காகம் புறாக்களுக்குச் சொல்லும் அறிவுரையை விளக்கி கதையின் உள்ளடக்கத்தை (ஒற்றுமையே வலிமை) மாணவர்களுக்குப் புரிய வைத்தல்.

**பேசவேண்டியவை :-** வேடனின் செயல், புறாக்களின் தவிப்பு, புறாக்களின் ஒற்றுமை.

# வாசிப்போம்

காகம் ஒன்று மரத்தில் கூடுகட்டி வாழ்ந்து வந்தது. அந்த மரத்தின் அடியில் உள்ள பொந்து ஒன்றில் பாம்பு ஒன்றும் வாழ்ந்து வந்தது. காகம் கூட்டில் இடும் முட்டைகளை எல்லாம் பாம்பு குடித்து வந்தது. அதனால் காகம் மனம் வருந்தியது.

ஒரு நாள் காகம் திட்டம் ஒன்று போட்டது. அவ்வூரில் உள்ள செல்வந்தரின் மகள் ஒருத்தி ஆற்றில் குளிப்பது வழக்கம். குளிப்பதற்கு முன் தனது முத்து மாலையைக் கழற்றி கரையிலே வைப்பாள்.

அதைக் கவனித்து வந்த காகம் ஒரு நாள் அந்த மாலையைத் தூக்கியது. அதைக் கொண்டு போய்; பாம்பு இருந்த மரப் பொந்தினுள் போட்டது. செல்வந்தரின் மகள் நடந்ததைத் தன் வேலையாளிடம் கூறினாள். அவன் உடனே சென்று மரப்பொந்தினை வெட்டினான். அதற்குள் இருந்த பாம்பு சீறியது. பாம்பைக் கொன்று மாலையை எடுத்துச் சென்றான்.

அதன் பின்னர் காகம் தன் கூட்டிலே முட்டைகளை இட்டது. அவற்றை அடைகாத்து குஞ்சுகள் பொரித்தது தன் குஞ்சுகளுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்தது.

## விடை கூறுவோம்:

1. காகம் எங்கே கூடு கட்டி வாழ்ந்து வந்தது?
2. காகத்தின் முட்டைகளை எது குடித்தது?
3. மரப்பொந்தினுள் காகம் எதைப்போட்டது?
4. பாம்பைக் கொன்றவன் யார்?
5. காகம் தன் குஞ்சுகளுடன் எவ்வாறு வாழ்ந்தது?

**கற்பித்தற்குறிப்பு**

**நோக்கம் :-** கதையைக் கூறுதல் காகத்தின் புத்திக்கூர்மை பற்றி கலந்துரையாடுதல். புத்தியைப் பயன்படுத்தி துன்பத்தில் இருந்து விடுபடுதல் பற்றி விளக்குதல். சொற்களின் பொருளைக் கூறுதல் இக்கதையைக் கூறும்படி மாணவர்களிடம் கேட்டல். சொற்பொருளை விளக்குதல்.

**அடைவு :-** புத்திக்கூர்மையின் மூலம் துன்பத்தில் இருந்து விடுபடலாம் என்ற எண்ணக்கருவைப் பெற்றிருத்தல்.

# வள்ளல்

கேட்போம் பாடம் 06 பேசுவோம்



**கற்பித்தற்குறிப்பு**

**நோக்கம் :-** ஒலிவட்டில் உள்ள பாடலைக் கேட்டு இசை அசைவுடன் பாடச் செய்தல்.
இக்காட்சியை விளக்கி ஈகைப்பண்பு பற்றிப் பேசவைத்தல்.

**பேசவேண்டியவை :-** காணப்படும் பொருட்கள், செல்வம், வறுமை, இரக்கம், பசி, மகிழ்ச்சி.

## வாசிப்போம்

*பாரி என்னும் ஒரு மன்னன்*
*பண்டைக் காலத்தில் வாழ்ந்தானாம்*
*இரக்க குணம் மிக உள்ளவனாம்*
*இனிய இதயம் படைத்தவனாம்*
*(பாரி)*

*பகலில் ஒருநாள் தேரேறி*
*பாரி உலாவச் சென்றானாம்*
*பசுமையான முல்லைக்கொடி*
*படரக் கொம்பின்றிக் கிடந்ததுவாம்*
*(பாரி)*

*அதனைக் கண்ட பாரி மன்னன்*
*அதற்கு உதவ நினைத்தானாம்*
*கொடியைத் தேரில் படரவிட்டு - கொடும்*
*வெய்யிலில் நடந்தே சென்றானாம்.*
*(பாரி)*

### விடை கூறுவோம்:

1. இப்பாடலில் வரும் மன்னனின் பெயர் என்ன?
2. பாரி எத்தகைய குணம் உள்ளவன்?
3. பாரி தேரில் எங்கு சென்றான்?
4. படரக் கொம்பின்றிக் கிடந்த கொடி எது?
5. முல்லைக் கொடியைப் பாரி எதிலே படர விட்டான்?

**கற்பித்தற்குறிப்பு**

**நோக்கம் :-** பாட்டை இசையுடன் பாடவைத்தல் பாரி மன்னன் பற்றிய கதையைக் கூறுதல். பாரியின் ஈகைப்பண்பு, இரக்க குணம் பற்றி விளக்குதல்.

**அடைவு :-** கொடைப் பண்பு பற்றி அறிந்திருத்தல். உதவும் பண்பைப் பெற்றிருத்தல்.

# மூத்தோர் சொற்கேட்போம்

கேட்போம் — பாடம் 07 — பேசுவோம்




**கற்பித்தற்குறிப்பு**

**நோக்கம் :-** ஒலிவட்டில் உள்ள பாடலைக் கேட்டு இசை அசைவுடன் பாடச் செய்தல்.காட்சிகளை விளக்கி; காட்சிகளின் ஒழுங்கமைப்பின் மூலம் கதையை உருவாக்கி; பேசவைத்தல். பெரியோரின் சொற்கேட்க வேண்டும் என்ற பண்பினை வலியுறுத்தல்.

**பேசவேண்டியவை :-** காணப்படும் செயற்பாடுகள், ஏற்பட்ட விளைவுகள், பொருட்கள், செல்வம், வறுமை, இரக்கம், பசி, மகிழ்ச்சி.

## வாசிப்போம்

கோழி ஒன்று தன் குஞ்சுகளுடன் வாழ்ந்து வந்தது. அக் குஞ்சுகளில் ஒன்று மட்டும் தாயின் சொல்லைக் கேட்பதில்லை. அது எப்பொழுதும் தாயை விட்டுப் பிரிந்தே நிற்கும். மற்றைய குஞ்சுகள் தாயின் சொல்லைக் கேட்டன.

ஒரு நாள் பருந்து ஒன்று வானில் வட்டம் இட்டுப் பறந்தது. தாய்க்கோழி தன் குஞ்சுகளை இறகால் அணைத்துக் கொண்டது. தனியே நின்ற அந்தக் குஞ்சைப் பருந்து பார்த்தது. அது தன் கால்களால் அந்தக் குஞ்சைத் தூக்கிச் சென்றது. குஞ்சு பயத்தினால் 'கீச் கீச்' என்று கத்தியது. தன் அம்மாவின் சொல்லைக் கேட்டிருந்தால் தனக்கு இந்தத் துன்பம் வந்திருக்காதே என்று நினைத்தது.

- தாய் சொல்லைத் தட்டாதே -

### விடை கூறுவோம்:

1. கோழி எவற்றுடன் சேர்ந்து வாழ்ந்து வந்தது?
2. வானில் வட்டம் இட்டுப் பறந்த பறவை எது?
3. தாய்க் கோழி தன் குஞ்சுகளை எதனால் அணைத்தது?
4. பயத்தினால் குஞ்சு எப்படிக் கத்தியது?
5. தாயின் சொல்லைக் கேட்காவிட்டால் துன்பம் வரும். சரியா? பிழையா?

**கற்பித்தற்குறிப்பு**

**நோக்கம் :-** இக்கதையை விளக்கிக் கூறுதல் இக்கதையின் உட்கருத்தை மாணவர் மனத்திருத்துதல். (தாய் சொல் கேட்டல்)

**அடைவு :-** தாயின் சொல்லைக் (மூத்தோரின்) கேட்க வேண்டும் என்ற எண்ணத்தைப் பெற்றிருத்தல்.

# சங்கிலியன்

கேட்போம் — பாடம் 08 — பேசுவோம்





**கற்பித்தற்குறிப்பு**

**நோக்கம் :-** ஒலிவட்டில் உள்ள உரையாடலைக் கேட்கச் செய்தல். காட்சியை விளக்கி, வினாக்களைக் கேட்பதன் மூலம் சங்கிலி மன்னன் பற்றிப் பேசவைத்தல்.

**பேசவேண்டியவை :-** காட்சியில் காணப்படும் சங்கிலியன் தோப்பு, சங்கிலியன் தோற்றம், வீரம், நந்திக்கொடி, வீரர்.

## வாசிப்போம்

இலங்கையில் பண்டைக் காலத்தில் தமிழர்களுக்கு என்று ஓர் அரசு இருந்தது. அது யாழ்ப்பாண அரசு என்று அழைக்கப்பட்டது. அதன் மன்னனாகச் சங்கிலியன் இருந்தான்.

அவன் தாய் மொழி மீதும் தாய் நாட்டின் மீதும் பற்று உள்ளவன். அவன் ஒரு சிறந்த வீரன்.

போர்த்துக்கேயர் வணிகம் செய்ய இலங்கைக்கு வந்தனர். பின்னர் அவர்கள் நாட்டையே பிடிக்க ஆசைப்பட்டனர். சங்கிலியன் அதனை எதிர்த்துப் போரிட்டான். போர்த்துகேயர் சங்கிலியனிடம் தோற்றனர். தோற்று ஓடிய படையினர் நீதிக்கு மாறான முறையில் சங்கிலியனைச் சிறைப்பிடித்தனர்.

### விடை கூறுவோம்:

1. பண்டைக் காலத்தில் இருந்த தமிழரின் அரசு எது?
2. யாழ்ப்பாண அரசின் மன்னன் யார்?
3. சங்கிலியன் எப்படிப்பட்டவன்?
4. போர்த்துக்கேயர் ஏன் இலங்கைக்கு வந்தனர்?
5. சங்கிலியன் யாரால் சிறைப்பிடிக்கப்பட்டான்?

**கற்பித்தற்குறிப்பு**

**நோக்கம் :-** யாழ்ப்பாணத் தமிழரசு, சங்கிலி மன்னன் பற்றிக் கலந்துரையாடல், சொற்களின் பொருளைக் கூறுதல், பாடத்தினை வாசிக்கச் செய்தல், வினாக்களைக் கேட்பதன் மூலம் மீளவலியுறுத்தல்.

**அடைவு :-** சங்கிலி மன்னன் பற்றி அறிந்திருத்தல் சொற்களின் பொருளைத் தெரிந்திருத்தல் மொழி வளப்பெருக்கம் பெற்றிருத்தல்.

# திருவள்ளுவர்

கேட்போம் பாடம் 09 பேசுவோம்



கற்பித்தற்குறிப்பு

**நோக்கம் :-** ஒலிவட்டில் உள்ள திருக்குறளைக் கேட்கச் செய்தல். காட்சியை விளக்கி, வினாக்களைக் கேட்பதன் மூலம் மாணவர்களைப் பேசவைத்தல்.

**பேசவேண்டியவை :-** திருவள்ளுவர், திருக்குறள், அமைப்பு, ( இரண்டு அடிகள் ) ஏடு எழுத்தாணி. வேறு புலவர்கள்.

## வாசிப்போம்

திருவள்ளுவர் சிறந்த தமிழ்ப் புலவர். இவர் தமிழ் நாட்டில் வாழ்ந்தார். திருவள்ளுவர் திருக்குறளை எழுதினார்.

திருக்குறள் ஒரு சிறந்த அறநூல். இது இரண்டு அடிகளைக் கொண்டது. இதில் மாந்தன் எப்படி வாழ வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

திருக்குறள்; உண்மை பேச வேண்டும், உயிர்களிடத்தில் அன்பாய் இருக்க வேண்டும் என்று கூறுகிறது. திருக்குறள் பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதனைப் 'பொது மறை' என்றும் அழைப்பர்.

மாந்தன் (மனிதன் )

## பதில் கூறுவோம்:

1. திருக்குறளை எழுதியவர் யார்?
2. திருவள்ளுவர் எங்கே வாழ்ந்தார்?
3. திருக்குறள் எத்தனை அடிகளைக் கொண்டது?
4. திருக்குறள் எவற்றைக் கூறுகிறது?
5. திருக்குறளை வேறு எப்படி அழைப்பர்?

**கற்பித்தற்குறிப்பு**

**நோக்கம் :-** திருவள்ளுவர், திருக்குறள் பற்றி வினாக்களைக் கேட்டு மாணவர்களுடன் கலந்துரையாடி பாடத்தை விளக்குதல். சொற்களின் பொருளைக் கூறுதல், பாடப் பகுதியை வாசிக்கச் செய்தல்

**அடைவு :-** திருவள்ளுவர், திருக்குறள் கூறும் ஒழுக்கங்கள் பற்றி அறிந்திருத்தல். சொற்பொருள் அறிந்திருத்தல்.

# தைப்பொங்கல்

கேட்போம் — பாடம் 10 — பேசுவோம்



கற்பித்தற்குறிப்பு

**நோக்கம் :-** ஒலிவட்டில் உள்ள உரையாடலைக் கேட்கச் செய்தல். வினாக்களைக் கேட்டு; தைப்பொங்கற் காட்சியை விளக்கி; பேசவைத்தல்.

**பேசவேண்டியவை :-** கதிரவன், காட்சியில் காணப்படும் பொருட்கள், நன்றி கூறும் பண்பு, உழவர், வாழிடப் பொங்கல்.

## வாசிப்போம்

தைப்பொங்கல் தமிழர் திருநாள். தைப்பொங்கலை தை முதலாம் நாள் கொண்டாடுவர். கதிரவனுக்கு நன்றி கூறுவதற்காகத் தமிழர் இந்நாளைக் கொண்டாடுவர்.

பொங்கல் அன்று முற்றத்தில் கோலம் இடுவர். புதுப்பானை வைத்துப் பொங்கல் பொங்குவர். பொங்கலோடு முக்கனிகளும் சேர்த்துக் கதிரவனுக்குப் படைப்பர்.

பொங்கலை உறவினர்களுடன் சேர்ந்து உண்டு மகிழ்வர். இந்த நாள் தமிழருக்கு மகிழ்ச்சியான நாள் ஆகும்.

**( முக்கனிகள் : மா பலா வாழை )**

### விடை கூறுவோம்:

1. தைப்பொங்கல் யாருடைய திருநாள்?
2. இதை எப்போது கொண்டாடுவர்?
3. எங்கே கோலம் இடுவர்?
4. ஏன் பொங்கலைக் கொண்டாடுவர்?
5. பொங்கலோடு சேர்த்து எவற்றைப் படைப்பர்?

**கற்பித்தற்குறிப்பு**

**நோக்கம் :-** தமிழர் திருநாட்கள் பற்றிக் கலந்துரையாடல். தைபொங்கல் நிகழ்வுகள், மேலோங்கி நிற்கும் பண்பாடுகள் ( நன்றி கூறுதல், விருந்தோம்பல் ) பற்றிக் கலந்துரையாடி விளக்குதல்.

**அடைவு :-** தமிழர் திருநாட்கள் பற்றி அறிந்திருத்தல், தைபொங்கலில் மேலோங்கி நிற்கும் தமிழர் பண்பாடுகள் பற்றித் தெரிந்திருத்தல்.

# தாயகத்தில் இறைநிலவன்

கேட்போம் — பாடம் 11 — பேசுவோம்



**கற்பித்தற்குறிப்பு**

**நோக்கம் :-** ஒலிவட்டில் உள்ள பாடலைக் கேட்டு இசை அசைவுடன் பாடச் செய்தல். தாயகம் பற்றிய வினாக்களைக் கேட்டல்; பேசவைத்தல்.

**பேசவேண்டியவை :-** காட்சியில் காணப்படும் தாயகத்துடன் தொடர்புடைய பொருட்கள், தாயகச்சூழல், கிணறு, பனை, ஆடு, மாடு, கோழி, உணவுகள், தாய்நாட்டின் மீது விருப்பம்.

**நிலவன் கோடை விடுமுறைக்குத் தாயகம் சென்றான். தான் அங்கு பார்த்தவற்றைத் தன் நண்பனிடம் கூறி மகிழ்ந்தான்.**

நிலவன் : வணக்கம்! ஆதிரையன்

ஆதிரையன்: வணக்கம்! நிலவன். தாயகத்தில் இருந்து எப்போது வந்தீர்கள்?

நிலவன்: நேற்று மாலை வந்தேன்.

ஆதிரையன்: தாயகத்தில் எங்கெங்கு சென்றீர்கள்?

நிலவன் : நான் திருகோணமலைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் சென்றேன்.

ஆதிரையன்: திருகோணமலையில் தானே உங்கள் பாட்டி இருக்கிறார்.

நிலவன் : ஓம், பாட்டியுடன் சென்று தான் அங்குள்ள வெந்நீர்க் கிணறுகளில் குளித்தேன். மட்டக்களப்பில் உள்ள பெரியம்மா வீட்டுக்கும் பாட்டியுடன் சென்றேன்.

ஆதிரையன்: யாழ்ப்பாணத்தில் உள்ள மாமா வீட்டுக்குச் செல்லவில்லையா?

நிலவன் : மாமா வீட்டுக்கும் சென்றிருந்தேன். அங்கு நிறைய நுங்கும், இளநீரும் குடித்தேன். மிகவும் சுவையாக இருந்தன.

**ஆதிரையன்** : மாமாவின் பிள்ளைகளுடன் விளையாடவில்லையா?

**நிலவன்** : அவர்களுடன் கடற்கரைக்குச் சென்று பட்டம் விட்டு விளையாடினேன். எனக்குத் தாயகத்தை விட்டு வர மனமே இல்லை.

**ஆதிரையன்** : எனக்கும் அடுத்த விடுமுறைக்குத் தாயகம் செல்ல ஆசையாக இருக்கிறது நிலவன்.

**நிலவன்** : கட்டாயம் போய் வாருங்கள். நேரம் ஆகிறது ஆதிரையன் நான் போய் வருகிறேன்.

தாய்மொழியும் தாய்நாடும்
தாய் தந்தை போலாகும்

## விடை கூறுவோம்:

1. நிலவன் கோடை விடுமுறைக்கு எங்கே சென்றான்?
2. வெந்நீர்க் கிணறுகள் எங்கே இருக்கின்றன?
3. எவை சுவையாக இருந்ததாக நிலவன் கூறினான்?
4. தாயகத்தில் நிலவன் யாருடன் விளையாடினான்?
5. நிலவனுடன் உரையாடியவர் யார்?

கற்பித்தற்குறிப்பு

**நோக்கம் :-** மாணவர்களை உரையாடவைத்தல்; தாயகம் பற்றி விளக்குதல்.

**அடைவு :-** தாயகம் பற்றி அறிந்திருத்தல்.

# தமிழர்

## கேட்போம் பாடம் 12 பேசுவோம்



**கற்பித்தற்குறிப்பு**

**நோக்கம் :-** ஒலிவட்டில் உள்ள பேச்சைக் கேட்கச் செய்தல்.காட்சியை விளக்கி வினாக்களைக் கேட்டுப் பேசவைத்தல்.

**பேசவேண்டியவை :-** தமிழர், பன் ாடு, உடைகள், தாய்நாடுகள், வாழும் இடங்கள், உறவுகள், தாய்மொழி, கூட்டுக்குடும்பம்

## வாசிப்போம்

இன்று உலகில் பல மொழிகள் பேசப்படுகின்றன. அம்மொழிகளில் ஒன்று தமிழ். இது தமிழரின் தாய்மொழி. தமிழீழமும் தமிழகமும் தமிழரின் தாய் நிலங்கள்.

தமிழர்கள் இன்று பல நாடுகளிலும் வாழ்கின்றனர். மலேசியா, சிங்கப்பூர், தென்ஆபிரிக்கா, மொறீசியசு முதலிய நாடுகளில் தமிழர்கள் குடியேறினர். இப்போது ஐரோப்பா, அவுத்திரேலியா, அமெரிக்க கண்டங்களிலும் தமிழர் பரந்து வாழ்கின்றனர்.

தமிழர் எங்கு வாழ்ந்தாலும் தமிழ் மொழியைக் கற்கின்றனர். தாய் மொழியைப் பேசுகின்றனர். அதனால் இன்று பல நாடுகளிலும் தமிழ் பேசப்படுகிறது.

### விடை கூறுவோம்:

1. தமிழர்களின் தாய்மொழி எது?
2. தமிழீழமும் தமிழகமும் யாருடைய தாய்நிலங்கள்?
3. தமிழர்கள் குடியேறிய இரண்டு நாடுகளைக் கூறுக?
4. ஐரோப்பாக் கண்டத்தில் தமிழர் வாழ்கின்றனர். சரியா? பிழையா?
5. நீங்கள் வீட்டில் தமிழ் பேசுகின்றீர்களா?

**கற்பித்தற்குறிப்பு**

**நோக்கம் :-** தமிழர்கள், தமிழ்மொழி, தாயகம், வாழும் இடங்கள், உடைகள், பண்பாடுகள் பற்றிக் கலந்துரையாடி; பாடத்தை விளக்குதல்.

**அடைவு :-** தமிழர்கள், தாயகம், வாழும் இடங்கள் பற்றி அறிந்திருத்தல்.

# விளையாட்டு

கேட்போம் பாடம் 13 பேசுவோம்



கற்பித்தற்குறிப்பு

**நோக்கம் :-** ஒலிவட்டில் உள்ள பாடலைக் கேட்டு இசை அசைவுடன் பாடச் செய்தல். காட்சியை விளக்குதல்; காட்சியைப் பற்றிப் பேசவைத்தல்.

**பேசவேண்டியவை :-** உடற்பயிற்சி, விளையாட்டு, விளையாட்டின் பெயர்கள், விளையாட்டின் நன்மைகள், குழுவிளையாட்டின் நோக்கம், விருப்பமான விளையாட்டு.

# வாசிப்போம்

விளையாட்டு ஒரு சிறந்த உடற்பயிற்சி. இதனால் உடல் உறுதி அடையும். உடல் உறுதியானால் நோய் இன்றி வாழலாம்.

விளையாட்டுகள் தனியாகவும், குழுவாகவும் விளையாடப்படும். பலர் சேர்ந்து விளையாடுவது குழு விளையாட்டு ஆகும்.

பந்தடித்தல், கிளித்தட்டு, வலைப்பந்து, கூடைப்பந்து போன்றன குழு விளையாட்டுகள் ஆகும்.

விளையாட்டுகள் ஒற்றுமையை வளர்க்கும். உளமகிழ்வைத் தரும். எனவே நாங்கள் ஒன்றாகச் சேர்ந்து விளையாடுவோம்.

## விடை கூறுவோம்:

1. எதனால் உடல் உறுதி அடையும்?
2. விளையாட்டு சிறந்த உடற்பயிற்சியாகும். சரியா? பிழையா?
3. குழு விளையாட்டு ஒன்று கூறுக.
4. விளையாட்டுகள் எதை வளர்க்கும்?
5. நீர் விரும்பும் விளையாட்டு எது?

**கற்பித்தற்குறிப்பு**

**நோக்கம் :-** விளையாட்டுப் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடல், விருப்பமான விளையாட்டுப் பற்றிக் கேட்டல். பாடப் பகுதியை வாசிக்கச் செய்தல்.

**அடைவு :-** விளையாட்டுகள், அவற்றின் நன்மை தீமைகள் பற்றி அறிந்திருத்தல்.



கற்பித்தற்குறிப்பு

**நோக்கம் :-** காட்சியை விளக்கி; வினாக்களைக் கேட்டு; பேசவைத்தல்.

**பேசவேண்டியவை :-** ஔவைப்பாட்டி, அவர் இயற்றிய நூல்கள், வேறு புலவர்கள்

## வாசிப்போம்

### சோமசுந்தரப் புலவர்

யாழ்ப்பாணத்தில் உள்ள நவாலி என்ற ஊரில் சோமசுந்தரப் புலவர் வாழ்ந்தார். இவர் சிறுவர் பாடல்கள் பலவற்றை எழுதினார் அவை இனிமையானவை, இலகுவானவை. நகைச்சுவை நிறைந்தவை. அவற்றுள் சில ஆடிக்கூழ், பவளக்கொடி போன்றவை ஆகும். தமிழர் திருநாள் ஆகிய ஆடிப்பிறப்பு அன்று ஆடிக்கூழ் காய்ச்சிக் குடிப்பர்.

இவரின் பாடல்களால் ஈர்க்கப்பட்ட சிறுவர்கள் இவரை அன்புடன் 'தங்கத் தாத்தா' என்று அழைப்பர்.

**விடை கூறுவோம்:**

1. சோமசுந்தரப் புலவரின் ஊர் எது?
2. இவரது பாடல்கள் எப்படியானவை?
3. சோமசுந்தரப் புலவர் எழுதிய சிறுவர் பாடல் ஒன்றின் பெயரைக் கூறுக?
4. ஆடிப்பிறப்பு யாருடைய திருநாள்?
5. 'தங்கத் தாத்தா' என்று அழைக்கப்பட்டவர் யார்?

**கற்பித்தற்குறிப்பு**

**நோக்கம் :-** சோமசுந்தரப் புலவர் பற்றிக் கூறுதல். பாடல்களின் சிறப்பு ( இனிமையானவை, இலகுவானவை ) பற்றி விளக்குதல். பாடல்களில் ஒன்றைப் பாடிக்காட்டுதல், சேர்ந்து பாடுதல்.

**அடைவு :-** சோமசுந்தரப் புலவர் பற்றி அறிந்திருத்தல்.

# அறிவோம்



மெத்திருக்கை

கரிக்கோல்






நூல்




எழுத்தேடு




எழுதுபலகை



மிதியுந்து

சிற்றுந்து





பேருந்து

விண்ணுந்து





கதிரவன்

நீருந்து





பூதி

# Valar Tamil 2 Themes

**Materials for the Primary level 2 are divided into printed and non-printed materials. Printed materials are in two kinds namely text book and work book. While non-printed materials include audio CD and others. Text book covers lessons based on themes and linguistic skills which are listening speaking and reading. Work book covers grammatical features and the emphases on writing alphabets, words, phrases and small sentences.**

Themes covers in the book are as follows.

1. Tamil language
2. Fine arts
3. Helping tendency
4. Seasons
5. Children story
6. Benevolence
7. Respect for elders
8. Sangilian - A king of Tamil kingdom
9. Saint Thiruvalluvar
10. Tamil festival- Thaippongal
11. Holiday tour
12. Tamils
13. Games
14. Tamil poet

Grammatical features covers in the book as follows.

1. Concordance between the subject and predicate in a sentence – Gender, Number, person
2. Verbs- present tense , past tense
3. Case system
4. Tense – present, past, future
5. Order of words in sentences
6. Proper ending of sentenses
7. Idioms and phrases

Instruction to the teachers reading learning objectives and achievements of lessons are given in each lessons. In addition evaluation forms are also attached in middle of the year and the end of the year in order to monitor progress of learning and teaching of Tamil language.

பெற்றோருக்கு

**தமிழே எங்கள் உயிர்**, அதுவே எங்கள் அடையாளம். எனவே தமிழ் கற்பதன் தேவையையும் கட்டாயத்தையும் ஆசிரியரும் பெற்றோரும் தத்தம் குழந்தைகளுக்கு வலியுறுத்த வேண்டும். தம் குழந்தைகளுக்குத் தமிழ் கற்கும் ஆர்வத்தை ஊட்ட வேண்டும். குழந்தைகள் தமிழ் கற்பதைச் சுமை என்று கருதாமல் சுவையாக எண்ணிக் கற்கும் வகையில் இப்பாடநூல்கள் பயிற்சி நூல்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

## கேட்டல்

வளர் தமிழ் 2 இல் கேட்டற் பகுதிக்கென ஒலிவட்டுக்கள் உள்ளது. இவ்வொலிவட்டு மாணவரின் கேட்டல் திறனை வளர்ப்பதற்குரியதாகும். கேட்டல் மூலமாகவேதான் பலுக்குதல் (உச்சரிப்புத்) திறன் நன்கு வளர்க்கப்படும். கேட்டவற்றைத் தன் மனத்திலே இருத்திக் கொள்ளப் பிள்ளை பழகிக்கொள்ள வேண்டும். சொல்லப்பட்டவற்றைப் பிள்ளை நன்கு கேட்டுக் கொண்டதா, கேட்டுக்கொண்டவற்றை விளங்கிக் கொண்டதா, என்ற இந்த இரண்டு விடயங்களையும் நாம் அறிந்து கொள்ளவேண்டும்.
கேட்டல் பகுதி பாடத்தலைப்பை மையமாக வைத்தே உருவாக்கப்பட்டுள்ளது.

## பேசுதல்

தரப்பட்டுள்ள படத்தைப் பார்த்துக் கூறுதல். மாணவர்கள் முதலில் தாமாகப் பேசவேண்டும். ஏற்கனவே நடந்த கேட்டற் பயிற்சி அவருக்கு இதில் உதவும். படத்தைப் பார்த்து விளங்கி பேசத் தொடங்குகிறாரென்றால் அது அவரது சிந்தனை வளர்ச்சியின் தொடக்க நிலையாகும். அந்நிலையில் அவரது பேசுதல் திறனை நாம் தூண்டி விடவேண்டும். இதனால் பிள்ளையின் மொழியாக்கத்திறன் மேலும் வளர்ச்சியடையும்.

வாசித்தல்

## உரத்த வாசிப்பு

வளர் தமிழ் 2 இல் வாசிப்பு உரத்த வாசிப்பாகவே இருத்தல் வேண்டும். மாணவர் ஒன்றை உள்வாங்கிக் கொண்டுவிட்டார் என்பதற்கான வாசிப்பின் வெற்றி, வாசித்த விடயத்தினை உள்வாங்கி அதனைத் தன் மொழியில் இயல்பாகத் கூறும் திறனிலே தங்கியுள்ளது.

## எழுதுதல்

எழுதுதல் என்பது எழுத்துப் பயிற்சியின் நிறைவுக் கட்டமாகும். மாணவரிடம் மொழிப் பயில்வு எவ்வளவு ஆழமாகப் பதிவுற்றுள்ளது என்பது அவருடைய எழுதுதலிலே தெரியும்.

மதிப்பீடு

மாணவர் திறன் மதிப்பீடு, அலகுக்கு அலகு செய்யப்பட வேண்டும். இதனால் அலகுக்கு அலகு அவர்கள் காட்டும் தேர்ச்சியை அவதானித்துக் கொள்ளலாம். இவ்வாறு செய்வதன் மூலம் குறைபாடுகளைக் களைவதற்கான வழி முறைகளை மேற்கொள்ள முடியும்.

எனவே பெற்றோர்களே இல்லங்களில் இயன்றவரை குழந்தையிடம் தமிழில் பேசுங்கள். இது அவர்களின் தமிழாற்றலை வளர்க்கப் பெரிதும் உதவும்.

சித்திரமும் கைப் பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்.

நன்றி

***தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை***

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

வளர் தமிழ் 12
பாடநூல்

வளர் தமிழ் 11
பாடநூல்

வளர் தமிழ் 10
பாடநூல்

வளர் தமிழ் 9
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 8
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 7
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 6
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 5
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 4
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 3
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 2
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 1
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் பாலர் நிலை
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் மழலையர் நிலை
பாடநூல் | எழுதுதல்